இராமநாதபுரம் மாவட்டக்கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: திரு.சு.சரவணன்,பி.காம்.,

நாள்: .12.2019

ந.க.2019/2019/அ2

பொருள்: பணியமைப்பு — கருவூலம் மற்றும் கணக்குத்துறை இராமநாதபுரம் மாவட்டக் கருவூல அலகு — தொகுதி நான்கில் அடங்கிய பணிகள் — இளநிலை உதவியாளர் / இளநிலை உதவியாளர் (பிணையம்) — பணிவரன் முறை செய்தல் — ஆணைகள் வழங்குதல் — தொடர்பாக.

பார்வை: முதன்மைச்செயலர்/ஆணையர், கருவூலக் கணக்குத்துறை, சென்னை அவர்களின் ந.க.7107/2019/சி3 நாள்:04.03.2019.

பார்வையில் காணும் முதன்மைச்செயலர்/ஆணையர், கருவூலக் கணக்குத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி IV—ல் (2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018) அடங்கிய பணிகளுக்கான தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டு இராமநாதபுரம் மாவட்டக் கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இராமநாதபுரம் மாவட்டக் கருவூல அலகில் பணிபுரியும் கீழ்க்காணும் இளநிலை உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆகியோர்களது பணிகள் சம்பந்தப்பட்ட பதவியில் பணியில் சேர்ந்த நாளில் இருந்து பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி.I.ஹேமலதா<br>இளநிலை உதவியாளர்(பிணையம்)<br>TNPSC வ.எண்: 39 | 06.03.2019 மு.ப | 06.03.2019 மு.ப | சார்நிலைக்கருவூலம் பரமக்குடி. |
| 2. | செல்வி.V.யோகலெட்சுமி<br>இளநிலை உதவியாளர்<br>TNPSC வ.எண்: 50 | 06.03.2019 மு.ப | 06.03.2019 மு.ப | மாவட்டக்கருவூலம், இராமநாதபுரம். |
| 3. | திருமதி.S.வினோதா<br>இளநிலை உதவியாளர்,<br>TNPSC வ.எண்: 147 | 08.03.2019 பி.ப | 08.03.2019 பி.ப | சார்நிலைக்கருவூலம் முதுகுளத்தூர். |

இப்பணிவரன்முறை ஆணையானது இவர்களது பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர் நீதி மன்றம் மதுரை கிளை ஆகியவற்றில் நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் ரிட் மனு மீதான இறுதி முடிவுகளுக்கு உட்பட்டது.

தனியர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவம் நிறைவு செய்ய வேண்டுமென தெரிவிக்கலாகிறது. மேலும் இப்பணிக் காலத்திற்குள் இப்பதவிக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கருவூல அலுவலர்,
இராமநாதபுரம்

பெறுநர்:
சம்பந்தப்பட்டவர்கள் (தொடர்புடைய அலுவலர் மூலமாக) 12/12/19

நகல்:
உதவிக் கருவூல அலுவலர்,
சார்நிலைக்கருவூலம்,
பரமக்குடி, முதுகுளத்தூர்.

(சம்பந்தப்பட்டவர்களின் பணிப்பதிவேடுகள் மற்றும் பதிவுறுத்தாள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றன. பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொண்டு அதன் விவரத்தினையும் பணிப்பதிவேடுகள் மற்றும் பதிவுறுத்தாள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலையும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.)

நகல்: அ1/மு.ஆ.கோ/ அ2.
உதிரி:1.

Scanned with CamScanner